# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2013 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, ஆவணங்கள் பதிவு (திருத்தச்) சட்டம்*

---

*(2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013, ஏப்பிறல் மாதம் 26 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2013 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, ஆவணங்கள் பதிவு (திருத்தச்) சட்டம்

[2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ-18/2013

### (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, ஆவணங்கள் பதிவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம் என்பதுடன் 2013, சனவரி 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் " பத்து ரூபா கட்டணம்" என்ற சொற்களுக் குப் பதிலாக, "பத்து ரூபா கட்டணம் அல்லது அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகை" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*(117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''பதிவுக்காக ஐந்து ரூபா கட்டணம் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''ஐந்து ரூபா கட்டணம் அல்லது அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகை பதிவுக்காகச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.'' என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆம் பிரிவு, அப்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"கட்டணங்கள். **48.** அமைச்சரினால் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்கள், அவை எக்கருமங்களுடன் தொடர்புபட்டுள்ளனவோ அக்கருமங்களுக்காகச் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும்.".

2-PL 007094 -1115 (2013/03)

*முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணையைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வட்டவணையின் I ஆம் பாகத்தில் -

(i) அதன் 6 ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின் வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :-

"(6) தடையெச்சரிக்கையில் விவரிக்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு காணிக்கும், ஒவ்வொரு காணி தொடர்பிலுமான ஒவ்வொரு தடையெச்சரிக்கையும் எந்தக் காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஒவ்வொரு காணிப் பதிவகத்துக்கும், இரண்டாண்டுகளைக் கொண்ட ஒவ்வொரு காலப்பகுதிக்குமான கட்டணம் 2,500.00";

(ii) அதன் (9) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(9) வெளிப்படையாக விலக்களிக்கப்படாத எந்தவொரு வகையினதுமான ஒவ்வொரு சாசனத்துக்குமான கட்டணம் 100.00";

(iii) அதன் (10) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(10) 29 ஆம் பிரிவின்கீழ் பதிவாளர் தலைமையதிபதிக்கு முன்வைக்கப்பட்ட சாசனமொன்றுக்கு, செலுத்தப்படற்பாலதான வேறேதேனும் கட்டணத்துக்கு மேலதிகமான கட்டணம் 1000.00";

(2) அவ்வட்டவணையின் III ஆம் பாகத்துக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

| "பாகம் III | ரூ. ச. |
|---|---|
| 1. உறுதிகளின் இணைப்பிரதிகள், சாசனங்கள் அல்லது ஆவணங்கள் அல்லது அனுப்பப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட அவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் என்பவற்றைப் பார்வையிடுவதற்கான அத்தியாயங்கள் II, III, IV, V அல்லது VI என்பவற்றின் கீழ் ஏதேனும் புத்தகத்தை அல்லது சுட்டியைப் பார்வையிடுவதற்கான விண்ணப்பமொன்று, தேடுதல் எந்தக் கொடுக்கல் வாங்கல் அல்லது கருமம் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அக்கொடுக்கல் வாங்கல் அல்லது கருமம் ஒவ்வொன்றுக்குமான கட்டணம் | 500.00; |
| 2. பின்வருவனவற்றுக்கான விண்ணப்பம் ஒன்றுக்காக :- | |
| (அ) ஏதேனும் காணி தொடர்பான ஏதேனும் உறுதியிலிருந்தான பிரதிகளுக்கான அல்லது பிரித்தெடுத்த பகுதிகளுக்கான கட்டணம் | 500.00 |
| (ஆ) ஏதேனும் காணி தொடர்பான ஏதேனும் பக்கத்திலிருந்தான அல்லது பக்கங்களிலிருந்தான பிரதிகள் அல்லது பிரித்தெடுத்த பகுதிகளுக்கான கட்டணம் | 100.00 |
| 3. பிரிவு 43 (2) இன்கீழான தடையெச்சரிக்கை தவிர, ஒரு முடிவுறாத வழக்கு, முன்னுரிமை அறிவித்தல், கைப்பற்றுகை முன்னுரிமை | |

அறிவித்தல் என்பவற்றின் பதிவுபற்றிய புறக்குறிப்பை வழங்குவதற்காக, பதிவின்மீது செலுத்தப்பட்ட அதே கட்டணம்.".

செல்லுபடியாக்குதல்.

**6**. இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு சனவரி 1ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது, பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பில் விதிப்பதற்கு அல்லது சேகரிப்பதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் விதிப்பனவு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட எவையேனும் கட்டணங்கள், பதிவாளர் தலைமையதிபதியினால் அல்லது இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய எவரேனும் ஆளினால் செல்லுபடியான முறையில் விதிப்பனவு செய்யப்பட்டதாக அல்லது சேகரிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், மேற்கூறப்பட்ட காலப் பகுதியின்போது விதிப்பனவு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட ஏதேனும் கட்டணம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்